அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன வேலைவாய்ப்புகள் 2026

வணிக அச்சிடுதல், பாதுகாப்பு அச்சிடுதல், வெளியீட்டுப் பணிகள் மற்றும் எழுதுபொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள, நன்கு நிறுவப்பட்டு இலாபம் ஈட்டும் வணிக நிறுவனமான அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனமானது, சிறந்த பணிப் பதிவுகளைக் கொண்ட, ஆற்றல்மிக்க மற்றும் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடிய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

கண்காணிப்பாளர் பதவி (JM 1-1) (தரம் II) (02 பதவிகள்)

பணியின் விபரம்

கூட்டுத்தாபனத்தின் உரிய திணைக்களத்தின் செயற்பாட்டு மட்டத்திலான பணிகளை கண்காணித்தல்.

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட, குறித்த பதவிக்குத் தொடர்புடைய (Progress Control / Estimate) துறையில் பெற்ற இளங்கலைப் பட்டத்துடன், அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனமொன்றில் குறித்த துறையில் குறைந்தது ஒரு (01) வருட கால பணி அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு:

a) மேற்குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

b) இணை உத்தியோகத்தர் (MA-3) வகுதியின் தரம் III இல் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

c) பதவிக்குத் தொடர்புடைய பாடத்துறையில் தொழில்நுட்ப வகுதியின் முகாமைத்துவ உதவியாளர் (MA 2-2) தரம் II இல் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

ஆட்சேர்ப்பு முறை

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்.

வயது எல்லை

22 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு கூடிய வயது வரம்பு பொருந்தாது.

சம்பள அளவுத்திட்டம்

ரூ. 72,650/-10 x 1,360 18 x 2,040 - 122,970/-

2027.01.01 முதல் நடைமுறைக்கு வரும் சம்பள விபரம்:

JM 1-1 2025

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2025.03.25 ஆம் திகதிய 01/2025 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக:

கண்காணிப்பாளர் பதவி (JM 1-1)	
01.01.2026	01.01.2027
65,633/=	72,650/=

சேவை நிபந்தனைகள்

மேற்குறிப்பிட்ட பதவி நிரந்தரமானதாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று (03) வருட பரீட்சார்த்த சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஏற்கனவே முந்தைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டு, உள்வாரி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஊழியர்கள் ஒரு (01) வருட பதில் கடமைக்காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

கொடுப்பனவுகள்

சம்பளத்திற்கு மேலதிகமாக இப்பதவிக்கு பின்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

- சுற்றறிக்கைகளுக்கு அமைவாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.
- வரவுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு.
- உணவுக் கொடுப்பனவு.

ஏனைய மேலதிக சலுகைகள்:

- ஊழியர் மற்றும் அவரது குடும்பத்தினரை உள்ளடக்கிய மருத்துவக் காப்புறுதித் திட்டம்.
- KPI அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் திட்டம்.
- EPF and ETF
- பயன்படுத்தப்படாத விடுமுறைகளைப் பணமாகப் பெற்றுக்கொள்ளும் வசதி.

விண்ணப்பிக்கும் முறை

2026.11.23 ஆம் திகதியன்று உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தமது கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பணி அனுபவம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்க / பொது நிறுவனங்கள் / கூட்டுத்தாபனங்கள் / சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்கள், தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் தலைவர், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பனலுவ, பாதுக்க. முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 2026.11.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில், ஆட்சேர்ப்புகள் குறித்த தகுதிவாய்ந்த அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். எந்தவொரு வகையிலுமான செல்வாக்குச் செலுத்தும் முயற்சிகளும் விண்ணப்பதாரரைத் தகுதியிழக்கச் செய்யும்.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,
பனலுவ,
பாதுக்க.